*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **17 செப்டம்பர் 2025**

**பத்திரிகை செய்தி**

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் 75 வது பிறந்த நாளை முன்னிட்டு, காரைக்கால் மாவட்டத்தில் குடியுரிமை பாதுகாப்பு காவல் நிலைய புதிய கட்டிட திறப்பு விழா, காவல் வாகனங்கள் மற்றும் கடலோர காவல் அதிவேக ரோந்து படகு உள்ளிட்டவைகளின் அர்ப்பணிப்பு விழா இன்று (17.09.2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் காணொளி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், கடலோர காவல் படை காரைக்கால் பிரிவின் அதிவேக ரோந்து படகையும் அர்ப்பணித்தார்.

காரைக்கால் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காணொளி வாயிலாக மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு ஆ .நமச்சிவாயம், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சௌகான், காவல் துறை தலைமை இயக்குனர் திருமதி ஷாலினி சிங், ஆளுநரின் செயலர் டாக்டர் . மணிகண்டன், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு ஏ.எஸ்.பி.எஸ் ரவி பிரகாஷ், காரைக்கால் மாவட்ட முதுநிலை காவல் கண்காணிப்பாளர் செல்வி லட்சுமி சௌஜன்யா, மற்றும் காவல் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.